இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 18-01-2025

# காவி உடையை அவர் அணியட்டும்!

வான்புகழ் வள்ளுவரை சனாதனக் கூண்டில் அடைத்து காவி உடை அணிவிக்கும் ஆளுநர் முதலில் காவி உடை அணிய வேண்டும். அவருக்கு இருக்கும் காவிப் பாசம் உண்மையாக இருந்தால், அவர்தான் முதலில் அணிந்து அனைவருக்கும் வழிகாட்ட வேண்டும். அவருக்கு இருக்கும் காவிப் பாசம் உண்மையானதாக அப்போதுதான் இருக்க முடியும்.

திருவள்ளுவர் தினத்தன்று காவி உடை அணிவிக்கப்பட்ட படத்துக்கு பூ தூவி இருக்கிறார் ஆளுநர் ரவி. அந்தப் படத்துக்குப் பக்கத்தில் இருக்கும் வள்ளுவர் சிலையில் உள்ள சொற்களை முதலில் வாசிக்க வேண்டும். ‘மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என்று சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய மெய்ப் பொருள் காண்பவராக ஆளுநர் இருந்திருந்தால் அப்படிச் செய்திருக்க மாட்டார்.

**ஆரியத்துக்கு எதிராக எழுந்ததே திருக்குறள். பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுதினார். “கோழைப் புலவருள் ஒருவராக மோழைப் பட்டுக் கிடக்க விரும்பாத நம் திருவள்ளுவ இனநலப் பேராசான், தம் நுண்ணறிவுத் திறங்கொண்டு, ஆரியத் தாக்கத்தால் அழிந்துவிடாமல் பல்லாயிரமாண்டுகளாக நம் பழம் பெருந்தமிழினத்தில் உருண்டு திரண்டு உருவாகி நிலைபெற்றிருந்த அறிவியல், வாழ்வியல், மெய்ப் பொருளியல் கருத்துகளையும், பண்பாடுகளையும் எதிர்காலத் தமிழின மக்கள் உணருமாறு, இலைமறை காயாக எடுத்து நிறுவிய இனநலக் காப்பு நூலே நம் அரும்பெறல் செல்வமாகிய திருக்குறள்” என்றார். அதனை அறியாத கும்பலில் ஒருவர்தான் ஆர்.என்.ரவி.**

**மெய்ப்பொருள் காண்பவராகக் கூட இருக்கத் தேவையில்லை. சட்டப்படி நடப்பவரா ரவி? அரசால் ஏற்கப்பட்ட பட வடிவமைப்புக்கு மாறான படத்துக்கு அவர் மரியாதை சூட்டி இருக்கிறார். இதுவே சட்டப்படி குற்றம் ஆகும். அவருக்கு சட்டமாவது? நீதியாவது? நெறியாவது? வாய்க்கு வந்ததை உளறி, தன் விருப்பத்துக்கு நடந்து, ‘சீப் பப்ளிசிட்டி’ தேடிக் கொள்வதுதான் ஆளுநரின் வழக்கம் என்பதை மக்கள் அறிவார்கள்.**

வெள்ளுடையில் வீற்றிருக்கும் திருவள்ளுவர் படத்தை 1950களின் மத்தியில் வரைந்தவர் ஓவிய மேதைகளில் ஒருவரான வேணுகோபால் சர்மா. அவர் வரையும் போது மேற்பார்வை பார்த்தவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். இந்த ஓவியத்தை தமிழின் ஆற்றல்மிகு ஆளுமைகள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். தஞ்சை தமிழ்ச் சங்கத்திலும், புதுச்சேரி தமிழ்ச் சங்கத்திலும் திருவள்ளுவர் ஓவியம் காட்சிப்படுத்தப்பட்டு அனைத்து தமிழறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தஞ்சை இராமநாதன் மன்றத்தில் நடைபெற்ற மாநாட்டில் 49 புலவர்கள் கூடி இந்த ஓவியத்தை ஏற்றுக் கொண்டார்கள். பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், தெ.பொ. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் அதில் முக்கியமானவர்கள்.

**ஓவியர் வேணுகோபால் சர்மாவின் வீட்டுக்கு வந்து ஓவியத்தை பார்த்துச் சென்றவர்கள்: தோழர் ஜீவா, பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, பெரியவர் பக்தவத்சலம், முத்தமிழறிஞர் கலைஞர், முன்னாள் முதலமைச்சர் பி.சுப்பராயன், திருமுருக கிருபானந்தவாரியார், எழுத்தாளர் கல்கி, கவியரசு கண்ணதாசன், பேராசிரியர் அன்பழகனார், நாவலர் நெடுஞ்செழியன்... இப்படிப் பல்வேறு அறிஞர் பெருமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓவியத்தை அசிங்கப்படுத்துகிறார் ஆளுநர்.**

ஓவியர் கே.ஆர்.வேணுகோபால் சர்மா எழுதிய ‘திருவள்ளுவர் திருவுருவப் பட விளக்கம்’ என்ற நூலை வெளியிட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். இவை அனைத்தும் 1959 ஆம் ஆண்டு நடந்தவை ஆகும். அன்றைய ஒன்றிய அரசு இதனை ஏற்றுக் கொண்டு 1960 ஆம் ஆண்டு திருவள்ளுவர் தபால் தலையை வெளியிட்டது. வேணுகோபால் சர்மா வரைந்த ஓவியத்தையே தபால் தலையாக வெளியிட்டது.

**இந்த ஓவியத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைக்க வேண்டும் என்று முதல் குரல் கொடுத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். ‘நானே வாங்கி வந்து தருகிறேன், வையுங்கள்’ என்று சொன்னார் கலைஞர். ‘நாங்களே வைக்கிறோம்’ என்று 1964 ஆம் ஆண்டு உறுதி அளித்தார் அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலம். அன்றைய துணைக் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்களால் திருவள்ளுவர் படம் திறந்து வைக்கப்பட்டது.**

1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த மூன்றாவது மாதத்தில் திருவள்ளுவரின் இந்த ஓவியம் அரசு அங்கீகாரம் பெற்ற ஓவியமாக அரசாணை வெளியிடப்பட்டது. (G.O.M.S. 1193) அனைத்து அரசு அலுவலகங்களிலும் இந்த ஓவியம்தான் இடம் பெற வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டது. **1989 ஆம் ஆண்டு இந்த ஓவியத்தை நாட்டுடைமை ஆக்கினார் முதலமைச்சர் கலைஞர். நாட்டுடைமை ஆக்கப்பட்ட ஒரே ஓவியம் இதுதான்.**

அரசியல் சட்டப்படி பதவி ஏற்றுக் கொண்ட ஆளுநர் சட்டத்தை மீறி, அரசாணைகளை மீறி தன் விருப்பத்துக்கு வள்ளுவருக்கு காவிச் சாயம் பூசிக் கொண்டிருக்கிறார்.

கி.பி.எட்டாம் நூற்றாண்டில் பரிமேலழகர் தொடங்கி இந்த ஆண்டில் ஆர்.என்.ரவி வரை நூற்றாண்டுதோறும் பலரது படையெடுப்புகளால் வீழ்த்த முடியாத வீரியம் திருக்குறளுக்கு மட்டுமே உண்டு.

தமிழ்நாடு என்ற மாநிலத்தின் பெயரைச் சொல்வதற்கு கூச்சப்படுகிறார், வள்ளுவருக்கு காவி அடிக்கிறார், சனாதன வகுப்பு எடுக்கிறார், குழந்தை திருமணத்தை ஆதரிக்கிறார். அம்பேத்கரை அசிங்க படுத்துகிறார், அரசியல் சட்டமே குறைபாடானது என்கிறார், இவ்வளவு பெரிய மேதையாக இருக்கும் ரவியை இந்திய குடியரசுத் தலைவர் ஆக்கலாம். ஐ.நா.சபைக்கே அழைத்துச் செல்லலாம். அங்கும் காவி உடையில் செல்லவும். ஆங்கிலேய உடை, ஆங்கில மொழியை அவர் விடுத்து அவர் சொல்வதற்கு அவரே முன்மாதிரியாக நடந்துகாட்ட வேண்டும். அதற்கு ஒரு தேதி குறிக்கவும்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் இந்தியா கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., செந்தில்குமார், குமாரசாமி, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மகன் சஞ்சய் சம்பத் ஆகியோர் இருந்தனர்.

## குமரி கண்ணாடிப் பாலத்தை

# 3 நாட்களில் 31 ஆயிரம் சுற்றுலா பயணிகள் பார்வையிட்டு பெருமிதம்!

### கழக அரசுக்கு பாராட்டு!

**கன்னியாகுமரி, ஜன. 18 - பொங்கல் விடுமுறையை முன்னிட்டு, கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறை நினைவகம் மற்றும் திருவள்ளு வர் சிலைக்கு கடந்த மூன்று நாட்களாக 31,000க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.**

37 கோடி ரூபாயில் கட்டப்பட்ட கண்ணாடிப் பாலத்தை 2024 டிசம்பர் 30ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களுக்காக திறந்து வைத்தார். விவேகானந்தர் பாறை நினைவிடத்திற்கு படகில் செல்ல அதிகாலை முதலே சுற்றுலா பயணிகள் வரிசையில் நிற்கத் தொடங்கினர்.



கடலில் தூண்கள் ஏதும் இல்லாமல் ஆர்ச் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது இந்த கண்ணாடி பாலம். பாலத்தில் நடந்து செல்லும் பகுதியில் இருபுறமும் காங்கிரீட் பகுதிகளும் நடுவே கண்ணாடியால் ஆன பகுதியும் இடம் பெற்றுள்ளது. கண்ணாடியில் நடக்க விரும்பாதவர்கள் காங்கிரீட் பகுதியில் நடந்தவாறு கண்ணாடியில் கடலின் அலைகளை ரசித்து செல்லலாம். 53 மி.மீ தடிமனில் கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. இது கடினப்படுத்தப்பட்ட கண்ணாடி ஆகும். தற்போது அதன் மீதுதான் சுற்றுலா பயணிகள் நடந்து செல்கின்றனர். கொளுத்தும் வெயிலிலும் இந்த கண்ணாடி சூடு ஆவது இல்லை. இதனால் வெயில் காலத்திலும், மழைக்காலத்திலும் இதன் மீது பாதுகாப்பாக நடந்து செல்ல முடியும். கடல்நடுவே அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதல் கண்ணாடி பாலம் இது ஆகும்.

பொங்கல் கொண்டாட்டத்தையொட்டி கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் கடல் நடுவே அமையப்பெற்றுள்ள கண்ணாடி பாலத்தை பார்வையிடுவதிலும் அதில் நடந்து செல்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். நாள் ஒன்றுக்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த கண்ணாடி பாலத்தை பார்வையிடுவது குறிப்பிடத்தக்கது. இது வரை 3 நாட்களில் 31 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

கன்னியாகுமரி கண்ணாடி பாலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கன்னியாகுமரி ஆட்சியர் அழகு மீனா வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

படகில் திரும்பிய குஜராத்தைச் சேர்ந்த லதா ஷா என்ற சுற்றுலாப் பயணி இடங்களைப் பார்வையிட்ட பிறகு, “கண்ணாடிப் பாலம் ஒரு அற்புதமான சுற்றுலாத் தலமாகும். இது மிகவும் சிறப்பாக உள்ளது. புதிதாகக் கட்டப்பட்ட கண்ணாடிப் பாலத்தின் வழியாக நடப்பது ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது.

குழந்தைகள், குறிப்பாக நானும் மிகவும் ரசித்தேன். பாறை நினைவுச்சின்னம் அல்லது சிலைக்கு அருகில் விற்பனையாளர்கள் தின்பண்டங்கள் மற்றும் பானங்களை விற்பனை செய்தால் நன்றாக இருக்கும், ஏனெனில் குழந்தைகள் நீண்ட நேரம் காத்திருந்த பிறகு பசியை உணரலாம்,” எனத் தெரிவித்தார்.

## தமிழ்நாடு அரசின் சார்பில்

# ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக கூடுதல் மனு!

### உச்சநீதிமன்றம் ஏற்று – இறுதி விசாரணைக்காக ஒத்திவைத்தது!

புதுடில்லி, ஜன. 18–

தமிழ்நாட்டில் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் நியமன விவகாரத்தில் கவர்னருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு புதிய இடையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளது. இந்த கூடுதல்மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதாக உச்சநீதிமன்றம் நேற்று அறிவித்து இறுதி விசார ணைக்காக ஒத்தி வைத்துள்ளது.

இது பற்றிய விபரம் வருமாறு :-

தமிழ்நாட்டில் பல்கலைகழக துணைவேந்தர்கள் நியமனத்துக்கு எதிரான வழக்கு, ஆளுநர் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுப்பதற்கு எதிரான வழக்குகளை இறுதி விசாரணைக்காக உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சட்டமன்றம் இயற்றும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காததையும், அரசின் பல்வேறு திட்டம் தொடர்பான ஆணைகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதை எதிர்த்து தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உ ச் ச நீ தி ம ன் ற த் தி ல் நீதிபதிகள் ஜெ.பி.பர்திவாலா மற்றும் ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டிருந்தது

இந்நிலையில் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் வெங்கடரமணி ஆஜராகி, தமிழ்நாடு ஆளுநர் தொடர்பான வழக்குகளை ஒரு வாரத்துக்கு பின்னர் விசாரணைக்கு எடுக்க வேண்டும் எனவும்,

இந்த விவகாரத்தில் கூடுதல் முன்னேற்றங்கள் உள்ளன என்றும் நீதிபதி ஜெ.பி. பர்திவாலா மற்றும் நீதிபதி மகாதேவன் அமர்வில் தெரிவித்தார்.

அப்போது நீதிபதிகள், தமிழ்நாடு ஆளுநர் மற்றும் அரசுக்கு இடையேயான விவகாரம் முடிவு எட்டப்பட்டுள்ளதா? அல்லது பழைய நிலையை தொடருகிறதா ? என வினவினர்.

அதற்கு தமிழ்நாடு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி ,மூகில் ரோத்கி மற்றும் பி. வில்சன்

ஆளுநர் அரசு இடையேயான மோதல் போக்கு என்பது பல்வேறு விவகாரங்களில் தொடர்ந்து கொண்டு வருகின்றன இது வரை முடிவுக்கு வரவில்லை என கூறியதோடு

இந்த விவகாரத்தில் தற்போது துணை வேந்தர்கள் நியமன பிரச்சினையும் வந்துள்ளது, அரசின் அனைத்து அதிகாரத்திலும் தலையிட்டு வருகிறார், முன்னதாக உச்ச நீதிமன்றம் கூறியும் ஆளுநர் நடவடிக்கையில் எந்த முன்னேற்றமும் இல்லை என எடுத்துரைத்தனர்.

மேலும் துணை வேந்தர் நியமனம் தொடர்பான கூடுதல் மனுவையும் முந்தைய வழக்கோடு இணைத்து விசாரணைக்கு ஏற்க வேண்டும், பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனம் தொடர்பான கூடுதல் மனு மீது புதிய நோட்டீஸ் பிறப்பிக்க வேண்டும் என கோரினர்.

அதற்கு பதிலளித்த நீதிபதிகள் இந்த வழக்கில் புதிய நோட்டீஸ் பிறப்பிக்க தேவையில்லை, அதே வேளையில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான தமிழக அரசின் கூடுதல் மனுவை விசாரணைக்கு ஏற்பதாக தெரிவித்தனர்.

அதேபோல இந்த விவகாரங்களில் தீர்வு எட்டவில்லை என்றால் நீதிமன்றம் தீர்வு காணும் என தெரிவித்து, மத்திய அரசின் தலைமை வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு ஆளுநர் அதிகாரம் தொடர்பான வழக்கு விசாரணையை ஒரு வாரத்துக்கு ஒத்திவைப்பதாகவும்,

அன்றைய தினம் இறுதி விசாரணை நடைபெறும் என்றும் திட்டவட்டமாக தெரிவித்தனர்.

